CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්වය නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

No 160G, Poorwarama Road, Kirulapone. **Tel:** +94 11 2826388/+94 11 2826384
**Tel:** +94 11 2826381/+94 11 2826387/+ 94 11 2826380
**Fax**: +94 11 2826146 **E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org

# ஜனாதிபதித் தேர்தல் 2019 இற்கான வாக்காளர் பதிவுப் பிரச்சினைகள் தொடர்பான அறிக்கை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாத இலங்கை வாக்களார்கள் பற்றிய பரவலான அறிக்கைகள் குறித்தும், மற்றும் அவர்கள் கிராம சேவகர்களை தொடர்பு கொண்டு ஆராய்ந்த பொழுது 2018 வாக்காளர் இடாப்பு அல்லது இணைய மூலமான தேர்தல் இடாப்பில் அவர்களது பெயர்கள் இல்லாமையைக் கண்டறிந்தது தொடர்பாகவும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்ப தற்கான நிலையம் கரிசனை கொண்டுள்ளது. இவ்வாறு, தங்களது பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இல்லாதது குறித்து கண்டறிந்த தனிப்பட்ட வாக்காளர்களிடமிருந்து 100 இற்கும் அதிகமான முறைப்பாடுகளை ஊஆநுஏ இதுவரை பெற்றுள்ளது.

கடந்த வாரம் தேர்தல் ஆணைக்குழுவுடன் இவ்விடயம் தொடர்பாக ஊஆநுஏ கேள்வி எழுப்பியிருந்தது, எவ்வாறாயினும், ஆணைக்குழுவிடமிருந்து இற்றை வரை அதற்கான ஒரு பதிலையும் அது பெறவில்லை. இதற்கிடையில், இந்த விடயம் தொடர்பான வாக்காளர் கரிசனை சமூக ஊடகத் தளங்களில் அதிகரித்து வருகின்றது. இடாப்பில் தங்களது பெயர்கள் காணப்படாததை வாக்காளர்கள் அறியுமிடத்து, எவ்வாறு தங்களது வாக்காளர் பதிவை சரிபார்ப்பது, மற்றும் எவ்வாறு கிராம சேவகர்களை அணுகுவது தொடர்பாக வாக்காளர்களுக்கு வெவ்வேறுபட்ட மற்றும் முரண்பாடான வகையில் அறிவுறுத்தல்களை வழங்கும் வகையில் அதிகளவிலான செய்திகள் பரவலாகப் பகிரப்பட்டு வருகின்றன. தேர்தல் தினத்தன்று வாக்காளர்கள் அவர்கள் எதிர்பார்த்தவாறு தேர்தலுக்கான வாக்காளர் இடாப்பில் பெயர்கள் இல்லாததின் காரணமாக அவர்கள் வாக்களிப்பதற்கு முடியாது என்பதை அறிந்து கொள்ளுமிடத்து வாக்களிப்பு நிலையங்களில் பரவலான குழப்பநிலைகள் மற்றும் இடையூறு விளைவிக்கும் நிகழ்வுகளுக்கான சாத்தியம் குறித்தும் ஊஆநுஏ குறிப்பாக கரிசனை கொண்டுள்ளது.

**இந்நிலைமை தொடர்பாக உடனடியாகத் தெளிவுபடுத்துவதற்கும்,** மற்றும் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொண்டிராத போதும் அல்லது தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில் அவர்களது பெயர்கள் இல்லாமையைக் கண்டறியும் போதும் வாக்காளர்களுக்கான தெளிவான அறிவுறுத்தலை வழங்குவதற்கும் **தேர்தல்கள் ஆணைக்குழுவை ஊஆநுஏ வேண்டிக் கொள்கிறது.** தேர்தல் தினத்தன்று தேர்தல் வாக்காளர் பதிவு தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேர்தல் அதிகாரிகளுக்கு என்ன அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டன தொடர்பான விபரங்களை வழங்குவதற்கும் ஊஆநுஏ தேர்தல் ஆணைக்குழுவை வேண்டிக் கொள்கிறது.

குறிப்பாக வாக்காளர் அட்டையை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லையாயின், தேர்தல் ஆணைக்குழுவின் தேர்தல் வாக்காளர் இடாப்பினை https://eservices.elections.gov.lk/myVoterRegistration.aspx. எனும் இணையத்தளத்திற்கு சென்று தங்களது தேர்தல் வாக்காளர் தொடர்பான விபரங்களைச் சரிபார்த்துக் கொள்வதற்கு **இலங்கை வாக்காளர்களுக்கு ஊஆநுஏ அறிவுறுத்துகிறது.**

அவர்களது விபரங்களைச் சமர்ப்பித்த பின்னர், வாக்காளர்கள் தாங்கள் ***தேர்தலுக்கான வாக்காளர் இடாப்பில் இருப்பதை*** அவர்கள் கண்டறியுமிடத்து, ஊஆநுஏ பின்வருவனவற்றை அவர்களுக்கு அறிவுறுத்துகிறது:

1. விபரங்களின் ஒரு திரைவிம்பப் படத்தை (ளஉசநநளொழவ) வாக்களிப்பு நிலையத்திற்கு, தேர்தல் தினத்தன்று கொண்டு செல்வதற்கும், மற்றும்
2. அவர்களது வாக்களிப்பு நிலையம் எங்கே என்பதை கவனமாக உறுதிப்படுத்துவதற்கும்.
3. வாக்களிப்பதற்கு வாக்காளர் அட்டை கட்டாயமானதல்ல – வேண்டுமானதெல்லாம் ஒரு செல்லுபடியாகும் வகையிலான அடையாள அட்டை மாத்திரமே.

தங்களது விபரங்களை சமர்ப்பித்த பின்னர், ***தேர்தலுக்கான வாக்காளர் இடாப்பில் அவர்களின் பெயர்கள் இல்லையென,*** வாக்காளர்கள் கண்டறியுமிடத்து, தங்களது பதிவுசெய்தலைத் தெளிவுபடுத்துவதற்கு அவர்களது மாவட்ட தேர்தல் அதிகாரியை அல்லது தேர்தல் செயலகத்தைத் தொடர்பு கொள்வதற்கு ஊஆநுஏ வாக்காளர்களை அறிவுறுத்துகிறது. மாவட்ட தேர்தல் அதிகாரியுடன் தொடர்புகொள்ளும் விபரங்களுக்கான ஒரு பட்டியல் https://elections.gov.lk/web/en/contact-us/contact-information/district-offices/ எனும் இணையத் தள முகவரியில் காண்பதற்கு முடியும். தேசிய தேர்தல் செயலகம் கொழும்பு, இராஜகிரியவில், சரண மாவத்தை எனும் முகவரியில் அமைந்துள்ளதுடன் 011 2868441 அல்லது 011 2868442 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளப்பட முடியும்.

அனைத்து வாக்காளர்களும் ஓர் அமைதியான மற்றும் சட்டபூர்வமான முறையில் நடந்து கொள்வதற்கும் மற்றும் ஓர் அமைதியான தேர்தலை நடத்துவதை அச்சுறுத்தும் ஏதேனும் வகையில் நடக்காதிருப்பதற்கும் ஊஆநுஏ பணிவாக வேண்டிக் கொள்கிறது. இந்த வெளிப்பாட்டினை உறுதிப்படுத்தும் நம்பிக்கையுடன் இந்தப் பிரச்சினையைத் தெளிவுபடுத்தி ஒரு அறிக்கையை விடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவை ஊஆநுஏ வேண்டிக் கொள்கிறது.